# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 12 இதழ் : 05 மே 2026 தனிபிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-
Vol : 12 Issue No : 05 May 2026 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-




Available Now
பரலோகமே
என் சொந்தமே
Dr. Ananda Stira

# அன்பரின் ஊழியம்


## ஆசிரியர் உரை



Dr. ஜேன் ஜாஷ்வா

பிரியமானவர்களே,

இந்த புதிய மாதத்தில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கொடூரமான கோடை காலத்தில் கர்த்தர் தாமே உங்களை பாதுகாக்கும்படியாகவும், சரீரத்தில் நல்ல சுகம், பெலன், ஆரோக்கியத்தை கர்த்தர் தரும்படியாகவும் ஜெபிக்கிறேன்.

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? 1 யோவான் 5:4-5. விசுவாசம் என்றால் என்ன? இயேசு தாமே நம்மை இரட்சிக்கிறவர், இயேசு தாமே நம்மை குணமாக்குகிறவர், இயேசு தாமே நம்மை பரிசுத்தமாக்குகிறவர், இயேசுகிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என விசுவாசிப்பதே விசுவாசம் ஆகும். இப்படி நாம் விசுவாசிக்கும்பொழுது தான் அற்புதங்கள் நடக்கும். அவர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார், அவர் எனக்கு கிருபை தருவார் என்ற உறுதியான நம்பிக்கை உங்கள் அனைவருக்கும் வேண்டும்.

கடந்த மாதம் ஆந்திரா மாநிலம் அமலாபுரத்தில் நடைபெற்ற நற்செய்தி பெருவிழா கூட்டத்தில் எங்கள் அப்பா *Dr.* ஆனந்த ஸ்திரா, எங்கள் மகன் *Bro.* ஜோனத்தன் மோசஸ் இருவரையும் கர்த்தர் வல்லமையாக பயன்படுத்தினார். அநேக மக்கள் விடுதலையானார்கள். அநேக சாட்சிகளை கர்த்தர் எழுப்பினார், அநேக மக்களை கர்த்தர் பெயர் சொல்லி அழைத்து அவர்கள் கண்ணீரை துடைத்தார். சென்னையில் நடைபெற்ற கூட்டத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.


ஆசிரியர்/வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org
Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

இந்த மாதம் நாகர்கோவில், திருநெல்வேலி, செகந்திராபாத், விஜயவாடா மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். நீங்களும் கூட்டங்களில் கலந்துக்கொள்ளுங்கள்.

அன்பரின் ஊழிய பங்காளராகிய நீங்கள் எங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து வருகிறீர்கள். அதற்காக நன்றி கூறுகிறேன். அன்பரின் ஊழியத்தில் பணிசெய்கிற பணியாளர்களுக்காவும், நல்ல பணியாளர்கள் வருவதற்காகவும் ஜெபியுங்கள்.

தொடர்ந்து எங்கள் அப்பாவின் நல்ல சுகத்திற்காகவும், அம்மாவின் நல்ல சுகத்திற்காகவும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல ஆரோக்கியத்திற்காகவும், பயணங்களில் தேவபாதுகாப்பு உண்டாகவும் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து காப்பாராக!


கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**

*jane@mojindia.org*


## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

**தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

NAMBIKKAI TELEVISION

சனி, ஞாயிறு

8:30PM to 9:00PM

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

ARADHANA TV

வியாழன், வெள்ளி

7:00PM to 7:30PM

# அளவற்ற தேவனின் கிருபை



## தேவ செய்தி
## Dr. ஆனந்த ஸ்திரா

அன்பரின் ஊழியத்தின் பாசமிகு பங்காளர்கள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. இந்த உலகம் முழுவதும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதே என் ஆவல். அதுவே என் மகிழ்ச்சியாக இருக்கிறது. அதற்காகவே நான் இன்னும் அதிகமாக இயேசுவிற்காக ஊழியம் செய்ய விரும்புகிறேன். அன்பரின் ஊழிய பங்காளராகிய நீங்களும் எங்களுடன் இணைந்து உங்கள் ஜெபத்தாலும், காணிக்கையினால் தாங்கி ஊழியத்தை செய்வதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

இந்த மாத தியானத்திற்கு சங்கீதம் 89:24-28-ஐ கர்த்தர் கொடுத்திருக்கிறார். **என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன், என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும்.** நம் ஒரே தேவனாகிய கர்த்தர் சாதாரண மனிதர்களாகிய நம்மேல் பூரண கிருபை உள்ளவராய் இருக்கின்றார். கிருபை என்றால் என்ன? தேவனுடைய இரக்கம், தயை, மனதுருக்கம் ஆகிய இம்மூன்றும் சேர்ந்ததுதான் கிருபை என்கிறோம். **நீதிமொழிகள் 19:22-ல் நன்மை செய்ய மனுஷன் கொண்டிருக்கும் ஆசையே தயை** என எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் அனைவர் மேலும் தயை உள்ளவராக இருக்கிறார். அனைவர் மேலும் கிருபை உள்ளவராய் இருக்கிறார்.

**எபே.1:8-9ல் அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார் காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று,** என விரும்பி நம்மை பரலோகத்தில் சேர்த்தார்.



நாம் செல்லவே முடியாது. தொண்ணூறு நாள் உபவாசம் இருந்தாலும், பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு கொடுத்தாலும் அவருடைய மாட்சியின் அருகில் நாம் சென்றுவிட முடியாது. எவ்வளவு பெரிய ராஜாவாக இருந்தாலும் சர்வ வல்ல தேவனின் பிரசன்னத்தில் நாம் செல்லவே முடியாது. தேவனின் பரிசுத்தம் அவ்வளவு பயங்கரமானது. ஏனென்றால் நாம் எல்லாருமே பாவம் செய்து தேவ மகிமையை இழந்தவர்கள் ஆனோம். **(ரோமர் 3:23)** நாம் அவருடைய சத்துருக்களாக இருந்தும் நம்மை அவர் நேசித்தார். தேவனுடைய அளவு கடந்த கிருபை, மாட்சிமையான கிருபை மோசேயின் மேல் இருந்தது. அந்த கிருபை தாவீதின் மேல் இருந்தது. தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு பிறகு, இயேசுவை ஏற்றுக்கொண்ட அனைவர் மீதும் தேவ கிருபை இருக்கிறது.

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தினால் நம்மையும் பரலோகத்தில் ஒன்றுசேர்த்தார். இது மிகப்பெரிய அற்புதம். அவருடைய கிருபையின் ஐசுவரியம், இரக்கத்தின் ஐசுவரியம் அளவிட முடியாது. **தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, எபே.2:4** அவருடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தின்படி வல்லமையுள்ள தேவன் மனுவுருவானார். இவ்வளவு மாட்சிமையான கர்த்தர் நம்மேல் இரங்கி நமக்காக மனிதரானார். ஒருவேளை அந்த இடத்தில் நாம் இருந்தால் மனிதாக மாறி பூமியில் வாழும்படி வந்திருக்கவே மாட்டோம். அந்த அளவிற்கு மாட்சிமையான பரலோகத்தை விட்டு, இந்த பூமிக்கு வர விரும்பமாட்டோம். பரலோகத்தில் நாம் நேரில் பார்க்கின்றபொழுது நமக்கு புரியும்.

தேவனுடைய பரிசுத்தம் தேவனுடைய நீதி மகா பயங்கரமானது. அதன் அருகில்

## ஏன் இந்த கிருபை எல்லாருக்கும் கிடைப்பதில்லை?

ஒரு முறை மலேசியாவிற்கு சென்றபொழுது பெரிய ஆலயத்தில் பேசினேன். ஒரு பாஸ்டர் என்னிடம் வந்து, ‘என் நண்பனுக்காக ஜெபிக்க வாருங்கள் என அழைத்து சென்றார். அவர் அந்த நாட்டின் பிரபலமான சிறப்பு மருத்துவராயிருந்தார். நானும் அந்த நபரை சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்கு அந்த நபருடைய ஆத்துமாவைக் குறித்து அதிக கவலை ஏற்பட்டது. அந்த நபர் என்னிடம், கிறிஸ்தவர்கள் மட்டும் ஏன் இப்படி சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக அலைந்துக்கொண்டிருக்கிறீர்கள்? என்ற ஒரு கேள்வியை கேட்டார்? அதற்கு நான், இயேசு

கிருபையாய் என்னை இரட்சித்துள்ளார், அந்த இரட்சிப்பை அனைவரும் பெற வேண்டும் என்பதே என் ஆவல், அதற்காக சுவிசேஷத்தை அறிவிக்கிறோன் என கூறினேன். அத்துடன் நிற்கவில்லை, தொடர்ந்து அவர் கூறியது, ஒரு குறிப்பிட்ட பெரிய நபருடைய பெயரை சொல்லி நான் அவருடைய ஆசிரமத்திற்கு கோடிக்கணக்கில் தந்திருக்கிறேன். ஏனென்றால் அவர் பாவமே செய்யவில்லை என சொன்னார். எனக்கு சிரிப்பு வந்தது. உடனே நான் ஒரு கேள்வி கேட்டேன், இயேசுவை உங்களுக்கு தெரியுமா? என்றேன். அந்த நண்பர், இயேசுவை எனக்கு தெரியும். நான் MBBS படிப்பிற்காக ஆயத்தம் ஆன நிலையில் என் பெற்றோர் விபத்தில் இறந்தபோயினர். ஆகவே நானும் மரித்துவிட வேண்டும் என தற்கொலை செய்ய முயன்றபொழுது, கல்லூரி வளாகத்தின் எதிர்புறத்தில் இருந்த கடல்மேல் வெண்மையான பளபளக்கும் வஸ்திரத்துடன், இயேசு எனக்கு காட்சி தந்தார். 'நீ தற்கொலை செய்யாதே, உன்னுடைய 5 வருட படிப்பிற்குரிய கட்டணமும் செலுத்தப்பட்டது. ஆனால் உன் ஆத்துமா மீட்கப்படவில்லை' என்று கூறி மறைந்தார். மறுநாள் கல்லூரியின் அலுவலகத்திலிருந்து ஒரு அழைப்பு வந்தது, அதில் தம்பி உன்னுடைய ஐந்து வருட மருத்துவ படிப்பிற்கான தொகை (25,00,000) முழுவதையும் ஒரு நபர் வந்து செலுத்திவிட்டார். பயப்படாதே, என்றார்கள். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இயேசுவை அறிந்துள்ளேன் என்றார்.

நாட்கள் கடந்தன. இவர் படிப்பை முடித்து பெரிய மருத்துவராக இருந்தப்பொழுதும் இயேசு செய்த அற்புதத்தை மறந்து அவருடைய அன்பை விட்டு விலகி வாழ்ந்தார். வயது முதிர்ந்து, இறக்கும் தருவாயில்..... பயங்கரமாக கத்தினார். நான் பெரிய சந்நியாசியின் சீடனாக அல்லவா பூமியில் வாழ்ந்தேன். என்னை ஏன் பாதாளத்திற்கு கொண்டு செல்கிறீர்கள் என கேட்டார். அப்பொழுது ஒரு குரல் கேட்டது உன் மூதாதையர் அனைவரும் இங்கு தான் இருக்கிறார்கள். நீயும் அங்கு செல்ல வேண்டியவன் தான் என்றது. உடனே அந்த நபர், நான் அங்கு போகமாட்டேன் என வாக்குவாதம் செய்தார். ஆனால் தேவதூதர்கள் அவர் மாயையை பின்பற்றின படியால் அவருடைய மூதாதையர் இருந்த பாதாளத்திற்கே அனுப்பிவிட்டனர். எத்தனை பரிதாபம் பாருங்கள். ஆம். அவரால் கர்த்தருடைய அளவற்ற கிருபையை பெற்றுக்கொள்ள முடியவில்லை. **பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள். யோனா 2:8**

மாயை என்றால் இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்து அதை மகிமைப்படுத்துவது மாயை ஆகும். இல்லாத ஒன்றை நடைமுறைப் படுத்துவது மாயை ஆகும். உயிரற்ற ஒன்றை கடவுள் என சொல்லுகிறோம். அவையெல்லாம் தவறு. தேவனாகிய கர்த்தர் தம் அளவுற்ற கிருபையை தம் குமாரனாகிய இயேசுவின் மூலம் நமக்கு காண்பித்தார். என் வாழ்வில் கர்த்தர் தம் கிருபையை எப்படி காண்பித்தார்? என்பதைக் குறித்து உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

## என்னை பிழைக்கச் செய்த தேவ கிருபை

நான் உன் அருகே கடந்துபோகும்போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன் இரத்தத்தில் கிடக்கிற

Tamil WhatsApp No
+91 95004 87059

உன்னைப்பார்த்து: பிழைத்திரு என்றேன், ஆம், உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப்பார்த்து: பிழைத்திரு என்று சொன்னேன். எசேக்கியேல் 16:6 இதில் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து பிழைத்திரு என்ற வார்த்தையின்படி கர்த்தர் என்னை பிழைத்திருக்கப் பண்ணினார். நான் பிறந்த நாளில் என் தாய் தமது ஐதீகத்தின்படி என்னை நரபலிக்கு என கொடுத்தப்பொழுது, கைவிடப்பட்ட நிலையில் நான் இரத்தத்தில் கிடந்தேன். அறிவு தெளிவதற்கு முன், நன்மை தீமை அறிவதற்கு முன் கோயிலில் நரபலியாக வேண்டிய என்னை கர்த்தர் கடந்து வந்து என்னை காப்பாற்றினார். என் குடும்பம் கிறிஸ்துவை அறியாத வைராக்கியமுள்ள பாரம்பரியத்தை சேர்ந்த குடும்பமாக இருந்தது. பூசாரி என் கழுத்தை வெட்டப்போகும்பொழுது, இயேசு கடந்து வந்து, பிழைத்திரு என்ற வார்த்தையின்படி எனக்கு வாழ்வை கொடுத்தார். அருமையான மிஷனெரிகள் உருவாக்கிய காப்பகத்தில் தாதியராக பணிபுரிந்த ஒரு அக்கா மூலம் என்னை பத்திரமாய் மீட்டு காப்பகத்தில் கொண்டு சேர்த்தார்.

**“பிழைத்திரு” என்ற வார்த்தைக்கு ஏராளமான அர்த்தம் உள்ளது. நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர், என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடையபேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர். சங்கீதம் 22:9 என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார். சங்.27:10**

அந்த காலங்களில் குழந்தைகளை நரபலி கொடுப்பது சர்வ சாதாரணமான ஒரு காரியமாக இருந்தது. என்னுடைய பிறப்பிலும் சாவிற்கு நேராக ஓடின என்னைப்போன்ற ஏராளமான பிள்ளைகளை வளர்ப்பதற்காக கர்த்தர் ஒரு வெளிநாட்டு மிஷனெரியை (ஏமி கார்மைக்கேல் அம்மையார்) கர்த்தர் தெரிந்துக்கொண்டிருந்தார். இந்த காப்பகத்தில் உள்ள மிஷனெரிகள் மற்றும் என்னை வளர்த்த தேவபிள்ளைகள் மூலம் இயேசுவையும், அவர் தரும் இரட்சிப்பு, கிருபைகளை அறிந்து பெற்றுக்கொண்டேன். அவர்கள் என்னை வளர்த்த நாட்களில் என் வாயிலிருந்தும், மூக்கிலிருந்தும் இரத்தம் வடியும். அந்த அளவிற்கு சிறுவயதில் நோயினால் கஷ்டப்பட்டேன். படிக்க முடியாது, சாப்பிட முடியாது, கடும் ஆஸ்துமாவினால் பாடுபட்டேன். என்னுடைய 13-ம் வயதில் என்னுடைய இரு சிறுநீரகங்களும் கெட்டுப்போய் விட்டது. இவ்வாறு நோயினால் பல பாடுகள்பட்டு இரத்தத்தில் கிடக்கிற என்னைப் பார்த்து தான் ஆண்டவர் பிழைத்திரு என்றார். அதனால் தான் நான் இன்று வரை பிழைத்திருக்கிறேன்.

கர்த்தர் நம்மைப்பார்த்து பிழைத்திரு என்று சொன்னபிறகு இந்த உலகம் நம்மை ஒன்றும் செய்ய இயலாது. அவர் ஒரு தாயைப்போல என்னை தேற்றினார். **ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன், ஏசாயா 66:13.**

## என்னை உயர்த்திய தேவனின் கிருபை

**அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார், எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப் பண்ணுகிறார். சங்கீதம் 131:7-8 (1சாமு.2:8)**

என்னுடைய வாலிப வயதில் மருத்துவப் படிப்பிற்கான தகுதிகள் எனக்கு இருந்தும் என்னை படிக்கவிடாமல் காப்பகத்தில் இருந்த அன்பற்ற தமிழ் வார்டன்கள் என்னை தடை செய்தனர். ஆனால் கர்த்தர் என்னை கைவிடவில்லை. ஏற்ற நேரத்தில் என்னை

உயர்த்தினார். இன்று பல பட்டங்களை, பல ஆய்வுகளை, பல ஆராய்ச்சி கட்டுரைகளை முடிக்கும்படியாக உயர்த்தி வைத்துள்ளார். யோசேப்பு அடிமையாக இருந்தப்பொழுது அவனை கர்த்தர் மறக்கவில்லை. ஏற்ற நேரத்தில் அடிமையாக இருந்த எகிப்து தேசத்திலேயே அதிபதியாக உயர்த்தி வலம் வர செய்தார். மோசே 40 வருடங்கள் பாடுகளை அனுபவித்தான். மிகுந்த மனதுருக்கமுள்ள சர்வ வல்ல தேவன் அவனது தள்ளாடும் வயதிலும்கூட பெரிய தீர்க்கதரிசியாக மாற்றினார். (உபா.34:10-12, யாத்தி.34:10) இயேசுகிறிஸ்து சிலுவையிலே நமக்காக பாடுபட்டதின் வாயிலாக தேவ கிருபையை நாம் அனைவரும் பெற்றுக்கொண்டோம். **உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும், செம்மையான இருதயமுள்ளவர்கள்மேல் உமது நீதியையும் பாராட்டியருளும். சங் 36:10 கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும். சங்.32:10 அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. யாக் 4:6**

கிருபை என சொல்லும்பொழுது அவை நாம் நினைத்திராத, நம் அறிவிற்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்து நம்மை ஆசீர்வதிப்பதாகும். தாழ்ந்தவர்களை உயரத்தில் வைத்து, துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார். யோபு 5:10 ஆம். நம் கர்த்தர் துக்கிக்கிறவர்களையும் மறவாமல், அவர்களை நினைத்து, இரட்சித்து உயர்த்தி ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களை செய்கிறவராயிருக்கிறார்.

நான் ஆபிரகாமின் தேவனுடைய கட்டளைப்படி காப்பகத்தைவிட்டு திருச்சி பட்டணத்திற்கு வந்தபொழுது என்னிடம் ஒரு பரிசுத்த வேதாகமமும், ஐம்பது ரூபாய் பணம் மட்டுமே இருந்தது. அப்பொழுது ஒரு நபர் என்னை பார்த்து, தம்பி, 'நீ கையில் வைத்திருக்கிற இந்த வேதமே உன்னை உயர்த்தும்' என்றார். உலகப்பிரகாரமான படிப்பில் கர்த்தர் என்னை உயர்த்தினார். ஆராய்ச்சி படிப்புகளை முடிக்க கர்த்தர் உதவினார்

ஒரு முறை எஸ்தர் என்ற மகளுக்கு கேன்சர் நோய் வந்து அதிக பாடுகளை அனுபவித்தாள். பல சிகிச்சைகளை மேற் கொண்டாள். மேலும் மருத்துவ சிகிச்சைக்கு பல இலட்சங்கள் செலவாகும் என மருத்துவர்கள் கூறினார்கள். ஆனால் நான் அவளுக்கு கொடுத்த ஒரு சிறு ஆலோசனையின்படி அவளுடைய பெற்றோர் செய்தனர். இன்று வரை அந்த மகள் எவ்வித சிகிச்சையும் எடுக்காமல் நல்ல சுகத்துடன் இருக்கிறார். இதுதான் கர்த்தர் தருகின்ற தெய்வீக ஞானம்.

அன்பு பிள்ளைகளே, ஒரு காலத்தில் என்னைப் பார்த்து ஏளனமாய் நினைத்தவர் முன்பாக கர்த்தர் என்னை இன்று உயர்த்தி வைத்திருப்பது அவருடைய மகா கிருபையே. தாழ்ந்தவர்களை உயர்த்தி வைக்கிற அவருடைய கிருபைக்கு அளவு கிடையாது. அவர் தயையினால் நம்மை மேன்மைப் படுத்துகிறார். அவருடைய கிருபையினால் நம்மை மேன்மைப்படுத்துகிறார் எவ்வளவு சோதனைகள் வந்தாலும் அவருடைய கிருபை நம்மை உயர்த்திக்கொண்டே இருக்கும் என்பதை மறக்காதீர்கள். அவருடைய கிருபை நம்மை உன்னதங்களில் வைத்து அழகு பார்க்கும். அத்துடன் கிருபையின் வரங்களை நமக்கு தருகிறார். (1 கொரி 12:1-12) கூட்டங்களில் நடைபெறுகிற அற்புதங்களை பார்த்து பலர் என்னிடம், 'இது எப்படி" என ஆச்சரியப்பட்டு கேட்பார்கள். தேவனால் இது கூடும் என்பேன்.

ஒரு இளம் தாயின் கருவில் உண்டான குழந்தைக்கு இரண்டு கைகளும், இரண்டு கால்களும் இல்லை. ஆகவே அந்த கருவை கலைத்துவிடும்படி மருத்துவர்கள் ஆலோசனை தந்தார்கள். அந்த சகோதரி கண்ணீரோடு கூட்டத்திற்கு வந்தார்கள். நான் அவர்களுக்காக பாரத்துடன் ஜெபித்துவிட்டு, கருவை கலைக்க வேண்டாம் என சொன்னேன். அவர்களும் விசுவாசத்துடன் சென்றார்கள். சரியாக 9-வது மாதம் அனைத்து உறுப்புகளுடன் அந்த குழந்தை அற்புதமாக பிறந்தது.

எனக்கு அன்பானவர்களே, ஒருவரை உயர்த்துவதற்கு பெரிய காரியம் தேவையில்லை. யோசேப்பையும் தானியேலையும் உயர்த்துவதற்கு கர்த்தர் ஒரு சொப்பனத்தை தந்தார். அறிவாளிகளை வெட்கப்படுத்தும்படி பைத்தியமானவைகளை தேவன் தெரிந்துக்கொள்கிறார். படிப்பறிவே இல்லாதவர்களும் சரியான பதில் சொல்லும்படியான ஞானத்தை கர்த்தர் தானியேலுக்கு தந்தார். இது அவருடைய அபிஷேகத்தினால் ஆகிறது.

கர்த்தர் தாமே என்னை உயர்த்தினபொழுது ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆதரவாக இருக்கும்படியே செய்துள்ளார். நமது S.J.Saves Trust மூலம் நம்பிக்கையற்ற பிள்ளைகளுக்கு நம்பிக்கையாக என்னை வைத்திருக்கிறார். இது தான் தேவனுடைய கிருபை. கிறிஸ்து இயேசு தம்மையே தாழ்த்தி சிலுவை சாவுக்கு என தன்னை ஒப்புக்கொடுத்தார்.

**English WhatsApp**
**No: +91 94889 32937**

# தேவனோடு உறவாட அற்புதங்கள் நடக்க அருள் புரியும் கிருபை

**அதற்கு அவர்: என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்த ருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன், எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபை யாயிருப்பேன், எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்க மாயிருப்பேன் என்று சொல்லி, யாத்தி.33:19**

சர்வ வல்ல தேவன் மோசேயுடன் பேசியது போல இன்று நம்மோடு பேச முடியுமா என்ற கேள்வி, சந்தேகம் அநேகருக்கு வருவதுண்டு. இயேசு கடைசி காலத்தில் தம்மை அறியாத மக்களுக்கு தம்மை பிரதியட்சமாக காட்சி அளிக்கிறார். இன்றைக்கு ஏராளமான விசுவாசிகள் கர்த்தரை பார்க்க வேண்டும் என ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எல்லாம் கர்த்தர் காட்சி தராமல் அவரை அறியாத மக்களுக்கு காட்சி அளிக்கிறாரே என்ற கேள்வி உங்களுக்கு வரலாம். கர்த்தர் தம் கிருபைகளை அவரை உண்மையாக நேசிக்கிறவர்கள் மேல் வைக்கிறார். அவருடைய ஊழியக்காரர்கள் மேலும் அவர் கிருபை வைக்கிறார். நாம் அவரோடு பேசும்பொழுது அவர் நம்மோடு பேசுவார். நாம் கர்த்தருக்காக வைராக்கியமாக இருக்கும்பொழுதும் அவருடைய கிருபை நம்மை சூழ்ந்துக்கொள்ளும். என்னுடைய ஊழிய அனுபவத்தில் நான் செய்கிற சிறிய ஜெபங்களை கேட்டு கர்த்தர் தாமே பலத்த காரியங்களை, பெரிய அற்புதங்களை

செய்து இருக்கிறார். (யோவான் 16:22 உபாகமம் 4:29 எரேமியா 29:13 ஏசாயா 55:6)

தேவன் நம்மிடத்தில் நேரடியாகவோ, தூதர்கள் மூலமாகவோ, பரிசுத்த ஆவியானவர் மூலமாகவோ பேசும்போது, இயற்கைக்கு அப்பாற்பட்ட மிகப்பெரிய அற்புதங்கள் வல்லமையான செயல்கள் காணப்படுகிறது. இந்த நவீன உலகில்கூட ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தை மோசே, யோசுவா, எலியா, நோவா செய்ததை நாம் பார்க்கிறோம். (யாத்தி.14:21-31 யோசுவா 10:12-14) இந்த பயங்கரமான கடைசி காலத்தில் கிறிஸ்துவுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் விரோதமாய் சாத்தான் பல பல தீமையான கொலை பாதக செயல்களை செய்து இயேசுவை பின்பற்றுகிறவர்களை அழித்து கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட காலத்தில் தேவ பிள்ளைகளாகிய நாம் தானியேலைப்போல, எலியாவைப்போல, மோசேயைப் போல, எலிசாவைப்போல, சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோவைப்போல, யோசுவாவைப்போல, அப்போஸ்தலர்களைப் போல கர்த்தருடைய பெலத்தில் எழும்ப வேண்டும். எபேசியர் 6:10-17, 1கொரி.4:10, ரோமர் 15:18-ன்படி கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள், கர்த்தரை தொடர்ந்து தேடுங்கள், அப்பொழுது உங்கள் கண்களும் உள்ளமும் பரலோக மகிமையை காணும். தேசத்தின் இருள் நீங்கும். அறியாமை ஒழியும், தெய்வீக ஒளி எங்கும் பிரகாசிக்கும். சங்.69:29, சங்.9:10

சங்கீதம் 105:4-ன்படி கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள், அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வில் கர்த்தருடைய வல்லமை வெளிப்படும். அவருடைய கிருபை உங்களை சூழ்ந்துக்கொள்ளும்.

ஆம், எனக்கன்பானவர்களே, இயேசு உங்கள் வீட்டிற்கு வர வேண்டும் என வாஞ்சையாக இருக்கிறீர்களா? அவருடைய ஞானம், அவருடைய கிருபை அளவிட முடியாதது. நிச்சயமாக உங்கள் வீட்டிற்கு வருவார். தம் கிருபையினால் உங்களை மூடுவார்.

## இந்த கடைசிகாலங்களில் நம்மை காக்கும் அளவற்ற கிருபை

இக்கட்டு காலத்தில் அவரே நமக்கு அரணான கோட்டையும் நம்பிக்கையும் காக்கும் தெய்வமாக இருக்கிறார். விசேஷமாக இந்த காலத்தில் நமது நாட்டிலும், பல நாடுகளிலும் இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு, அவரை தொழு கிறவர்களுக்கு, ஆராதிப்பவர்களுக்கு, பலவிதமான இக்கட்டுகளும், பலவிதமான துன்பங்களும், ஏன்? அநீதியான கொலைகளும், மரணமும் வருவதை நாம் பார்க்கிறோம். ஒரு பக்கத்தில் சில நாடுகள் இயேசுவை நேரடியாக தரிசித்து, தங்கள் பாரம்பரியத்திலிருந்து விடுதலை பெற்று, திரள்திரளாக இயேசுவிடம் வருவதை பார்க்கிறோம். இருப்பினும், கிழக்கத்திய நாடுகளிலும், நம் நாட்டிலும் உபத்திரவம் பெருகுவதை அறிந்துள்ளோம். அத்துடன் உலகளாவிய போர்கள், பொருளாதார பிரச்சனைகள், பசி, பட்டினி, காலவரையற்ற வறுமைகள், நம்பிக்கை துரோகங்கள் பெருகிக்கொண்டு இருக்கிறது. கிறிஸ்தவர்கள் இன்று பலவிதங்களில் ஒடுக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறோம். கலங்காதீர்கள். தீர்க்கதரிசி எலியாவை தேவன் தாமே சாரிபாத்

விதவையின் மூலமாகவும், ஒரு காகத்தை கொண்டும் மூன்றரை ஆண்டுகள் போஷித்தார். எலியாவை போஷித்த தேவன், தம் மேல் விசுவாசம் கொண்டுள்ள உங்களையும் போஷிப்பார். எலியாவை கொடூரமான ராணி யேசபேலின் கரத்திலிருந்து விடுவித்த தேவன் தாமே உங்களையும் எல்லா வன்கொடுமை, மிரட்டல்களுக்கு தப்புவிப்பார். அவரே தமது ஜனத்திற்காக மகா பெரிய பராக்கிரமசாலியாக எரே.20:10-ன்படி ராஜாதிராஜாவாக வந்து மீட்பார், பாதுகாப்பார். இஸ்ரவேலை கொடிய பார்வோனின் கைக்கு தப்புவித்து, நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் தெய்வீக மன்னாவால் போஷித்து, செழிப்பான தேசத்திற்கு கொண்டு சென்ற தேவன் உங்களுக்கும் அப்படியே செய்வார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் மோசே செங்கடலை பிளந்தார். ஏழு மடங்கு அதிகமாய் சூடாக்கப்பட்ட எரிகிற அக்கினிச்சூளையிலிருந்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவிற்கு ஒரு சேதமும் ஏற்படாதபடி தேவன் தாமே தப்புவித்தார். சிங்க குகையிலிருந்த தானியேலுக்கு ஒரு தீங்கும் நேரிடாதபடி தேவன் காப்பாற்றினார். மற்ற தேவ பிள்ளைகளுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்ற கேள்வி வருகிறதா? தேவனுடைய கிருபை அவர்கள் மீது அளவில்லாமல் ஊற்றப்பட்டிருந்தது. இயேசு கடலின் மீது நடந்தார், அந்த வல்ல செயல்கள் இன்றைய காலத்திலும் நடைபெற முடியும். பழைய ஏற்பாட்டு காலத்து மகத்துவங்கள் மீண்டும் வர ஆரம்பித்து விட்டது. இது இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன் அடையாளமாக இருக்கிறது. பெருமையான அனைத்தின் மீது தேவ கோபாக்கினை வந்து அழித்துவிடும்.

கர்த்தருடைய பலத்த தூதர்கள் தம்முடைய பிள்ளைகளை காக்கும்படி ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆகவே விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள், இடைவிடாமல் கர்த்தருடைய சமூகத்தை தேடுங்கள். பக்திவிருத்திக்கு ஏதுவான வார்த்தைகளையே பேசுங்கள். கர்த்தர் சீக்கிரமாக வரப்போகிறார். அவருடைய கிருபை சங்கீதம் 34-ன்படி உங்களை காத்து வழிநடத்துவதாக!





உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

**மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**




**கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!**

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

## வங்கிக் கணக்குகளின் விபரம்

| ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS | Dr. ANANDA STIRA |
|---|---|---|
| A/c no. 10848559426 | A/c no. 10848474869 | A/c no. 10848469699 |

IFS Code: SBIN 0000930 State Bank of India, Cantonment, Trichy Main Branch.

**Cell No 94888 45627, 80987 42638**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# S.J. SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு
நீங்கள் எதைச் செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன். **மத்தேயு 25:40**

## Founders Day Celebration







➤ சேலம் மாவட்டம் அயோத்தியா பட்டிணம் பகுதியில் உள்ள நமது S J SAVES TRUST டியூஷன் சென்டரில் 300 ஏழை எளிய மாணவ மாணவியர்கள் படித்து வருகிறார்கள்.

➤ Dr. ஆனந்த ஸ்திரா ஐயா தனது 74வது பிறந்த நாளை முன்னிட்டு அவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கேக் மற்றும் பல்வேறு கல்வி உபகரணங்களை வழங்கியும், இறுதியில் அறுசுவை விருந்தும் கொடுத்து பிள்ளைகளை மகிழ்ச்சிக்குள்ளாக்கினார்கள்.

➤ இந்த நிகழ்வில் நமது ட்யூசன் சென்டரில் படிக்கும் 300க்கும் மேற்பட்ட பிள்ளைகள் கலந்து கொண்டனர். ஐயாவை மகிழ்விக்க பிள்ளைகள் நடனம் மற்றும் பாடல் பாடினர்.

➤ அனைத்து பிள்ளைகளும் ஐயாவிற்கு வாழ்த்து சொல்லி மகிழ்ந்தனர்.







**S.J. Saves Trust-ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய**

**Bank A/C Name : S.J. Saves Trust**
**Account No : 019150310875369**
**Bank : Tamil Nadu Mercantile, Palakarai, Trichy**
**IFS Code : TMBL0000019**
**A/C Type: Current**

# MAY 2026

**MAY 01** தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார். 1கொரி.6:1

**MAY 02** நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். அப்போஸ்.10:38

**MAY 03** ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். அப்போஸ்.6:8

**MAY 04** அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார். சங்கீதம் 66:7

**MAY 05** அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது. ஏசாயா 40:26

**MAY 06** என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன். யாத்தி.9:16

**MAY 07** உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார், அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன். உபாகமம் 7:21

**MAY 08** உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார். உபா.10:17

**MAY 09** வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்... யூதா 1:24

**MAY 10** தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. 1பேதுரு 3:22

**MAY 11** உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். யாக்கோபு 1:21

**MAY 12** தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும்,... இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. எபி. 4:12

**MAY 13** சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், ....மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார். எபி.1:3

**MAY 14** கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். எபே.6:10

**MAY 15** தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக்கொள்வார். (சங்.49:15)

**MAY 16** அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன். ஓசியா 13:14

**MAY 17** ...மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும். உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம். கொலோ.1:11

**MAY 18** கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள். 1 நாளா.16:11

**MAY 19** தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; 2 நாளா.16:9

**MAY 20** பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். சங்.29:1

**MAY 21** இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து. உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். சங்.63:2

**MAY 22** தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துங்கள். சங்.68:34

**MAY 23** ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார். சங்.106:8

**MAY 24** கர்த்தர் மகத்துவமானவர்; தமது சத்தத்தைக் கேட்கப்பண்ணி, தமது புயத்தின் வல்லமை யைக் காண்பிப்பார். ஏசாயா 30:30

**MAY 25** நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். மத். 22:29

**MAY 26** இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும். சத்துருவினுடைய சகல வல்லமை யையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன். லூக்கா 10:19

**MAY 27** நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றுவிட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன். பிலி.3:10-11

**MAY 28** ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார். சங்.106:8

**MAY 29** அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே; ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணினீர். சங்.77:14

**MAY 30** நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்.... எபே 3:16

**MAY 31** நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு... மகிமை உண்டாவதாக. ஆமென். எபே.3:20-21

# துதி அறிக்கை

## கடனிலிருந்து விடுதலையானேன்!



நான் கிறிஸ்தவளாக இருந்தாலும் சத்தியத்தை அறியாமல் இருந்தேன். அன்பரின் ஊழிய கூட்டத்திற்கு வந்து கர்;த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு, சத்தியத்தை அறிந்துக்கொண்டேன். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

2018-ம் ஆண்டு எனக்கு எட்டு லட்சம் ரூபாய் கடன் இருந்தது. ஐயா எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே அந்த கடனிலிருந்து அற்புதமாக என்னை விடுதலையாக்கினார். தற்பொழுது ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள இரண்டு வீடுகளை கர்த்தர் தந்திருக்கிறார். இன்றைக்கு எங்கள் வீட்டில் ஜெபக்கூட்டத்தை நடத்தி வருகிறோம். இத்தனை அற்புதங்களை செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

*- திருமதி. சகாய மெல்லஸ் மேரி,*
*தொண்டமாங்கரை.*

## நெஞ்சு வலியிலிருந்து விடுதலையானேன்!



எனக்கு இரண்டு முறை நெஞ்சு வலி வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை எடுத்தேன். அதன்பிறகு கூட்டத்திற்கு வந்து, *Dr.* ஆனந்த ஸ்திரா அவர்களிடம், நெஞ்சு வலியிலிருந்து எனக்கு விடுதலை வேண்டும் அதற்காக ஜெபியுங்கள் என்றேன். ஐயா எனக்காக ஜெபித்தார்கள். இந்நாள் வரை நெஞ்சு வலி இல்லாமல் பரிபூரண சுகத்துடன் கர்;த்தர் தாமே என்னை பாதுகாத்து வருகிறார். என்னை அற்புதமாக பாதுகாத்து வருகிற கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

*- திரு. இன்னாசி முத்து,*
*திருச்சி.*

**Telugu WhatsApp No:**
**+91 91770 87860**

## மனநோயிலிருந்து விடுதலை

என் மகள் மருத்துவ படிப்பிற்காக சேர்ந்திருந்த நேரம் மனநோயினால் பாதிக்கப்பட்டு ஒரு வருடமாக கல்லூரிக்கு செல்ல முடியவில்லை. அப்பொழுது மார்த்தாண்டத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நானும் என் மகளும் வந்து கலந்துக்கொண்டோம். *Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் என் மகளுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். அதன்பிறகு மகளிடத்தில் நல்ல மாற்றம் தெரிகிறது. இந்த ஆண்டு கல்லூரிக்கு செல்லவும் ஆயத்தமாக இருக்கிறாள். அற்புதமாக விடுதலையாக்கிய கர்த்தரை துதிக்கிறேன்.*

*- திரு. தாமஸ்,*
*கன்னியாகுமரி.*

## கை வலியிலிருந்து விடுதலையானேன்!



நான் வெளிநாட்டில் வேலை செய்துக்கொண்டு இருக்கிறேன். ஐயா குடும்பத்தினரை என்னால் நேரில் பார்க்க முடியாவிட்டாலும் அவர்களுக்காக தினந் தோறும் ஜெபிப்பேன். தற்பொழுது ஒரு மாத விடுமுறைக்காக இந்தியா வந்திருக்கிறேன். இங்கு வந்ததிலிருந்து கைவலியினால் அதிகமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். *திருச்சி கூட்டத்திற்கு வரும்பொழுது பயங்கர கை வலியுடன் தான் வந்தேன். Dr. ஜேன் ஜாஷ்வா அவர்கள் நோயாளிகளுக்காக ஜெபித்தார்கள். அந்த நேரத்தில் என்னுடைய கைவலியிலிருந்து நான் விடுதலையானேன். தேவனுக்கே மகிமை!*

*- திரு. ஹோல்டர் ஆலிஸ்டர், திருச்சி. .*

## குழந்தை பாக்கியம் கிடைத்தது!



எங்களுக்கு திருமணம் ஆகி ஆறு வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாமல் அதிக வேதனையுடன் இருந்தோம். 2008-ல் காரைக்காலில் அன்பரின் ஊழியம் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் கலந்துக்கொண்டோம். *Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் எங்களுக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே மனமிரங்கினார். 2009-ம் ஆண்டு என் மனைவி கருத்தரித்தாள், இரண்டு பெண் குழந்தைகளை கர்த்தர் தந்தார். அவர்கள் இப்பொழுது 12-ம் வகுப்பு தேர்வு எழுதியுள்ளார்கள். தேவனுக்கே மகிமை.*

*- திரு.அருள் ராஜ், பாண்டிச்சேரி.*

## ஜெபத்திற்கு பதில் தந்தார்!



ஜனவரி மாதம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு முதன்முறையாக நான் வந்தேன். *மூன்று ஜெப விண்ணப்பங்களை எழுதிக் கொடுத்து ஜெபித்து சென்றேன். கர்த்தர் எனக்கு மனமிரங்கினார். நீண்ட நாட்களாக இருந்த தடை நீங்கி, எனக்கு வரவேண்டிய பணம் கிடைத்தது. தேவ கிருபையால் புதிய தொழில் துவங்கினேன். நல்ல உடல் நலத்தை கர்த்தர் தந்தார். இந்த கூட்டத்திற்கு வந்து ஜெபித்து சென்ற பிறகு தேவ ஆசீர்வாதத்தை உணர்ந்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

*- திருமதி. முல்லைக்கொடி,*
*சேலம்.*

## பிரச்சனைகள் நீங்கியது!



நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத மக்கள் மத்தியில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன். அன்பரின் ஊழிய கூட்டத்திற்கு வந்து தேவ கிருபையால் இரட்சிக்கப்பட்டேன். கடந்த மாதங்களில் ஒரு சில பிரச்சனைகளினால் சரியான தூக்கம் இல்லை. *அன்பரின் ஊழியத்திற்கு வந்து சாட்சி சொல்கிறேன் என பொருத்தனை செய்து ஜெபித்தேன். அந்த பிரச்சனை என்னை விட்டு நீங்கும்படி கர்த்தர் உதவி செய்தார். இரவில் நல்ல தூக்கத்தை கட்டளையிட்டார். தேவனுக்கே மகிமை!*

*- திரு. எபனேசர்,*
*கோவில்பட்டி..*



# அமலாபுரத்தில் நடைபெற்ற நற்செய்தி பெருவிழாவின் புகைப்படங்கள்















# இயேசு கிறிஸ்து இராஜாதி இராஜாவின் வருகை

அமெரிக்கா, ஈரான், இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே நடைபெறுகிற யுத்தத்தைப் பார்த்து அநேக மக்கள் இது தான் உலக யுத்தமா, இதுதான் மூன்றாம் உலகப்போரா? என கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். அதற்கான விளக்கம் இதோ!

பிரியமானவர்களே, மத்தேயு 24:6-ல் யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் என இயேசு சொன்னது போல, இந்த யுத்தம் ஆரம்பம்தான், முடிவு அல்ல!

இந்த யுத்தத்திற்கு மத்திய கிழக்கு அரபு நாடுகளும், இஸ்ரேலும், அமெரிக்காவும் தற்காலிகமாக சமாதானத்தை ஏற்படுத்துவார்கள். ஆனால் அனைத்து நாடுகளுக்குள்ளும் இஸ்ரேலுக்கு விரோதமான பகை இருந்துக்கொண்டே இருக்கும். இந்த அரபு நாடுகளில் கர்த்தர் இயேசு பிரத்தியட்சமாக அநேகருக்கு காட்சியளித்து அந்த நாடுகளில் உள்ள மக்களுக்கு தம்மை வெளிப்படுத்துவார். ஏற்கனவே உண்மை கிறிஸ்தவர்களை ஒடுக்கின கொலை வெறிகள் சில அடக்கப்பட்டுள்ளன. இன்னும் அவை மாறும். இந்த சமயத்தில் அநேக அரபு மக்கள் மெய்யான தெய்வம் இயேசுவை கண்டுகொள்வார்கள்.

இதற்கிடையில் பல அரபு நாடுகளில் உண்டான எழுப்புதல், இரும்பு கரம் கொண்டு கிறிஸ்தவர்களை கொலை செய்து, அடக்கின நாடுகளாகிய சீனா, வடகொரியா, நைஜீரியா போன்ற நாடுகளிலும் பரவி, அங்கேயும் எழுப்புதல் உருவாகும். தேவ பக்தி உள்ளவர்களுக்கு விரோதமாக இத்தனை ஆண்டு நடைபெற்ற ஒடுக்குதல் முறிக்கப்படும். அதை நீங்கள் கண்ணார காண்பீர்கள். விசேஷமாக என்னுடைய *“பரலோகமே என் சொந்தமே”* என்ற புத்தகத்தில் இதைக் குறித்து எழுதி உள்ளேன். நான் பரலோகம் சென்ற பொழுது வாட்ச்மேன் நீ (Watchman Nee) என்னும் மிகப்பெரிய சீன ஜெப வீரரை இயேசு எனக்குக் காண்பித்தார். அவர் அணிந்திருந்த சிவப்பு அங்கியில் “China is for God Almighty Yeshua” என எழுதப்பட்டிருந்தது. ஆம், இயேசு என்னிடத்தில் *“நிச்சயமாக கம்யூனிச இரும்பு கதவுகள் உடைக்கப்படும்”* என்றார். உலகத்தால் தள்ளப்பட்ட மற்றும் கருப்பர்கள் என்று சொல்லப்பட்ட இழிவாக எண்ணப்பட்ட ஆப்பரிக்காவிலும் மிகப்பெரிய எழுப்புதல் ஆரம்பமாகிவிட்டது. அங்கு பல தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் எழும்பியுள்ளார்கள். இப்பொழுது நீங்கள் காண்கிற படியே ரஷ்யா தலை நிமிர்ந்து நிற்கும். எனவே தான் அமெரிக்கா, ஐரோப்பா இடையில் பல கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அவர்கள் அந்தி கிறிஸ்துவினால் ஏமாற்றப்பட்டு இஸ்ரவேலுக்கு விரோதமாவார்கள். நமது தேசத்திலும் இப்பொழுது துன்பம் இருந்தாலும் பிறகு பெரிய எழுப்புதல் உண்டாகும். இவைகள் எல்லாம் குறுகிய காலத்தில் நடைபெறும். அதேநேரத்தில் அந்தி கிறிஸ்துவின் வருகைக்கான எல்லா ஆயத்தங்களும் நடைபெறும். கடலின் மத்தியில் உள்ள காசாவில் இது ஆரம்பிக்கும். தென்திசை ராஜாவாகிய அமெரிக்கா, கனடா, ஐரோப்பா இதற்கு தங்களை அறியாமலேயே முழு ஒத்துழைப்பு



கொடுப்பார்கள். இதற்கிடையில் எப்பொழுது வேண்டுமானாலும் யுத்தம் வரலாம், ஆயத்த மாயிருங்கள்.

தேசங்கள் அனைத்தும் அந்தி கிறிஸ்துவால் ஏமாற்றப்படும். இஸ்ரேலுக்கு விரோதமாக உலக நாடுகள் அனைத்தும் மிகப்பெரிய யுத்தம் செய்யும். அதில் மூன்றில் இரண்டு பங்கு யூதர்கள் அழிவார்கள். இயேசு கிறிஸ்துவை பரிகசித்து அவரை மந்திரவாதி என்றும், தவறான வழியில் மேரிக்கு பிறந்தவர் என இன்னும் நம்பி கொண்டிருக்கிற யூதர்கள் வெட்கப்பட்டுப்போவார்கள். இவர்களை காப்பாற்ற மோசேயும் வரமாட்டார், வேறு யாரும் வர மாட்டார்கள். இயேசு தான் வருவார். தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்த்து அபயமிடுவார்கள். சுருக்கமாக நான் உங்களுக்கு கூறியுள்ளேன். எந்த சூழ்நிலையிலும் ஆயத்தமாயிருங்கள். தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள். கர்த்தருடைய சுவிசேஷ ஊழியத்திற்கு அதிகமாய் ஜெபியுங்கள். இந்த சம்பவங்கள் அனைத்தும் துரிதமாக நடக்கும்பொழுது கடைசி யுத்தம் உண்டாகும். அதன்பிறகு இயேசுவின் வருகை இருக்கும்.

எனவே, வாசகர்களாகிய நீங்கள் ஞானவான்களாய் மாறி காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

*ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து,*

*நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.*

*துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி,*

*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.*

*எபேசியர் 5: 15-20*

கர்த்தருடைய இரகசிய வருகை மகா சமீபம். அந்தி கிறிஸ்துவின் காலம் முடியும்பொழுது கர்த்தர் தம்முடைய சேனைகளோடு மகிமையாக வந்து உலகத்தின் துன்மார்க்கர்களை அழித்து உலகத்தை ஆயிர வருட அரசாட்சிக்கு ஆயத்தப்படுத்துவார். பரலோகத்திலிருந்து புதிய எருசலேம் தேவாலயம் வரும்.



# உலக செய்திகள்

- கோடை காலத்தில் உடலை குளிர்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்ள தினமும் 2-3 லிட்டர் தண்ணீர், இளநீர் மற்றும் மோர் பருகவும்.
- பருத்தி ஆடைகளை அணிந்து பகல் 12 முதல் 3 மணி வரை வெளியே செல்வதைத் தவிர்க்கவும்.
- லெமன் ஜுஸ், வெள்ளரிக்காய், தர்பூசணி போன்ற நீர்ச்சத்து மிக்க உணவுகளை அதிகம் உட்கொள்வது உடல் வெப்பத்தைத் தணிக்கும்.

## சிறிய அளவிலான உணவை அடிக்கடி உண்ணுங்கள்

அதிக அளவு கார்போ ஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புகள் கொண்ட கனமான உணவுகள் செரிமானத்தின் போது உடலின் உள் வெப்ப நிலையை உயர்த்தி உங்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

போதுமான ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்கும், உடலின் மைய வெப்பநிலையை நிலைப்படுத்துவதற்கும், சிறிய அளவிலான இலகு வான உணவுகளுக்கு மாறி நாள் முழுவதும் அடிக்கடி சாப்பிடுங்கள்.

## முழு தானியங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்

பழுப்பு அரிசி, ஓட்ஸ், பார்லி மற்றும் கோதுமை போன்ற முழு தானியங்களை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவை அதிக ஊட்டச்சத்து மதிப்பையும் நார்ச்சத்துக் களையும் கொண்டுள்ளன. இந்த கார்போ ஹைட்ரேட்டுகள் மெதுவாக செரிக்கப்பட்டு, நீண்ட காலத்திற்கு ஆற்றலை வெளியிடுவதால் உடல் மைய வெப்பநிலை உடனடியாக அதிகரிப்பது தவிர்க்கப்படுகிறது.

## வெளி உணவைத் தவிர்க்கவும்

கோடைக் காலத்தில் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க சுகாதாரமான சூழலில் சமைக்கப்படாமலும் சேமிக்கப்படாமலும் உள்ள சாலையோர உணவுகளைத் தவிர்க்கவும்.

முன்னரே வெட்டப்பட்ட உணவுகள் மாசுபடுவதால் கெட்டுப் போகக் கூடும். இது உணவு வழி நோய்கள் மற்றும் வயிற்றுத் தொற்று களுக்கு வழிவகுக்கும்.

## உங்கள் கண்களைப் பராமரித்துக்கொள்ளுங்கள்

நீங்கள் வெயிலில் வெளியே செல்லும்போதெல்லாம் பாதுகாப்புக் கண்ணாடிகளை அணியுங்கள். ஏனெனில் பொருட்களின் மீதான பிரதி பலிப்புகள் கூட கண்களின் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கும்.

கோடைக் காலத்தில் உங்கள் ஆரோக்கியத்தையும், நல்வாழ்வையும் உறுதிசெய்ய உங்கள் உணவு முறையிலும் வாழ்க்கை முறையிலும் சில அவசியமான மாற்றங்களைச் செய்வது இன்றியமையாதது. அந்தந்தப் பருவத்திற்குரிய பழங்கள் மற்றும் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மேலும் சூரியனின் தீங்கு விளைவிக்கும் கதிர்களிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். போதுமான தூக்கம் பெறுங்கள்.


We Are Hiring!!!
CAMERA MAN/ VIDEO EDITORS
GRAPHIC DESIGNER
(Any UG/PG Canditates)
Skills Required: Able to work in adobe photoshop Adobe Illustrator, Corel Draw, Adobe Premiere pro & After Effects
Male / Female, Christians Prefered
Apply to: ministryofjesushr@gmail.com


திருச்சியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
மே 30, சனிக்கிழமை
காலை 9-30 மணி முதல்
மதியம் 2-00 மணி வரை
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10–வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு (80 அடி ரோடு), தில்லைநகர், திருச்சி.
தொடர்புக்கு
94888 45627, 0431 - 2741925

செகந்திராபாத்தில்

அற்புத

# குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

மே
09
2026
சனிக்கிழமை

நேரம்: காலை 9:30 முதல் மதியம் 2:30 மணி வரை

இடம்: YMCA AUDITORIUM

மணிக்கூண்டு மற்றும்

யசோதா மருத்துவமனை அருகில், செகந்திராபாத்.

மேலும் விபரங்களுக்கு:

**99445 36343, 94888 45627**

**Rev. Sylendra Moses - 76740 61601**



தேவ செய்தி

Dr. ஆனந்த ஸ்திரா

Dr. ஜேன் ஜாஷ்வா



விஜயவாடாவில்

மே
10
2026
ஞாயிற்றுக்கிழமை

# அற்புதத்தின் மாலை

நேரம்:

மாலை 5 மணி முதல் 9 வரை

இடம்:

ஹோட்டல் இலாபுரம் கன்வென்ஷன் ஹால்,

இரயில்வே ஸ்டேஷன் ரோடு, காந்திநகர், விஜயவாடா

மேலும் விபரங்களுக்கு:

**94888 45627 & 99445 36343**

(கூட்ட முடிவில்
தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும்**
**காலை 9.30 மணி – 11.30 மணி**

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ ஆவிக்குரிய தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

Live @ My Deliverance Church



டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

திருச்சியில்

# விடுதலை பெருவிழா

2026 மே 16, 17, சனி, ஞாயிறு

தினமும் மாலை 6:00 மணி

**டெலிவரன்ஸ் சர்ச்**

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத் தெரு
மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி-18

வாருங்கள்! ஆசீர்வாதம் பெற!

- பரவசமூட்டும் பாடல் வேளை
- அனல் பறக்கும் தேவவார்த்தை
- விடுதலையின் ஜெபம்



சிறப்பு தேவ செய்தியாளர்
**Pr.R. அகஸ்டின்**
*(பர்திமேயு சுவிசேஷ ஊழியங்கள், மதுரை)*

தொடர்புக்கு
**99421 66066, 94888 45627**

- கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்
- my deliverance church youtube channel வாயிலாக விடுதலைப் பெருவிழாவை நேரலையிலும் பார்த்து பயனடையலாம்.
- வியாதி, சத்துரு போராட்டம், கடன் பாரம், வேலை இல்லாமை மற்றும் பல்வேறு பிரச்சனைகளினால் துயரப்படும் மக்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.


நாகர்கோவிலில்
அற்புத
குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
மே 1
2026
வெள்ளிக்கிழமை
அரசு விடுமுறை
நேரம் : காலை 9:30 முதல்
மதியம் 2:30 மணி வரை
இடம் : SGS டிலைட் ஹால்,
பெதஸ்தா காம்ப்ளக்ஸ் மற்றும்
விஜயதா ஹோட்டல் அருகில்,
WCC ரோடு, நாகர்கோவில்
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா
மேலும் விபரங்களுக்கு: 94888 45627, 82203 17472


திருநெல்வேலியில்
மே 2, 2026 – சனிக்கிழமை
அற்புத
குடும்ப ஆசீர்வாதக்
கூட்டம்
நேரம்
காலை 9:30 முதல்
மதியம் 2:30 மணி வரை
இடம்
CSI நூற்றாண்டு மண்டபம்,
சித்தா கல்லூரி அருகில், முருகன்குறிச்சி,
பாளையங்கோட்டை திருநெல்வேலி
மேலும் விபரங்களுக்கு:
94888 45627
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா Mrs. மார்கிரேட் ஸ்திரா